

மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தேர்தல் அலுவலரும் வருவாய் கோட்டாட்சியாருமான யோகேஷ்வரனிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் உடன் இருந்தனர்,



பவானி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் கழக வேட்பாளர் பவானி கே.ஏ.சந்திரசேகர் தனது வேட்பு மனுவினை தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் தாக்கல் செய்தார். உடன் முன்னாள் அமைச்சர் என்.கே.கே.பெரியசாமி, கூட்டணிக் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.



பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் கழக வேட்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் பெருந்துறை தாலுகா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ராம்குமாரிடம் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார். உடன் பெருந்துறை நகராட்சி காங்கிரஸ் கவுன்சிலர் பசிரியா பேகம், கொ.ம.தே.க. பொருளாளர் கே.கே.சி.பாலு, தே.மு.தி.க. மா.செ.செல்வகுமார், இ.கம்யூனிஸ்ட் சின்னசாமி உள்ளனர்.



மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிடும் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர் சதீஷிடம் வேட்புமனுவை தாக்கல் செய்தார். உடன் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் முன்னாள் எம்.பி. டாக்டர்.டி.என்.வி.எஸ். செந்தில்குமார் பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார். உடன் தருமபுரி திமுக மேற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் கூட்டணிக் கட்சியினர் உள்ளனர்.




திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் பூண்டி.கே.கலைவாணன் , தேர்தல் அலுவலரும் மாவட்ட வருவாய் கோட்டாட்சியருமான திருமதி சத்யாவிடம் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுடன் இணைந்து வேட்புமனுவை தாக்கல் செய்தார்.



நாகை மாவட்டம் வேதாரணியம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.மீ.புகழேந்தி வேதாரணியம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் கண்ணனிடம் வேட்புமனுவை தாக்கல் செய்தார். உடன் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ் கே வேதரத்தினம், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் பி.வி.கே விவேக் , இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் சிவகுருபாண்டியன் மற்றும் உதயசூரியன் ஆகியோர் உள்ளனர்.



மொடக்குறிச்சி தொகுதியில் மதசார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் செந்தில்நாதன் மொடக்குறிச்சி தாலுகா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் தியாகராஜனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், காங்கிரஸ் தெற்கு மாவட்ட தலைவர் முத்துக்குமார், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி இளைஞர் அணிச் செயலாளர் சூரியமூர்த்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தெற்கு மாவட்ட தலைவர் கமலநாதன் உள்ளனர்.



பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி (தனி) வேட்பாளர் மருத்துவர் ச.த.ஜெயலெட்சுமி, பெரம்பலூர் தொகுதி தேர்தல் அதிகாரியும் கோட்டாட்சியருமான அனிதாவிடம் வேட்புமனுவை தாக்கல் செய்தார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் மேயர் சத்யா ஓசூர் சப்கலெக்டர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்த போது எடுத்த படம். உடன் மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ, தொகுதிப் பொறுப்பாளர் பார்.இளங்கோவன் , மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ், ஒன்றியச் செயலாளர் கஜேந்திர மூர்த்தி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.